1971 ஜூலை 2]

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவர் அவர்களே, ஜீப் பஸ் சர்வீஸ் நஷ்டத்தில் ஓடுவதால், தனியார் அவற்றைச் சரிவர நடத்துவதில்லை. அவர்கள் கைவிட்டு விட்டால் அரசாங்கமே வேறு வகையில் அவற்றை எடுத்துச் செயல்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அப்படி ஒரு கருத்து இருந்து வருகிறது. ஆனால் அரசாங்கம் இப்பொழுது அது பற்றி எந்தவிதமான ஆலோசனையோ அல்லது திட்டமோ வைத்திருக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. அரசினர் தீர்மானம்.

வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கு தேர்தல்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, ' தமிழ்நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 18-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் " வகுப்பு II பிற உறுப்பினர்கள் " என்ற தலைப்பின் கீழ் (h) பகுதிக்கிணங்க, மாண்புமிகு பேரவைத் தலைவர் முடிவு செய்யும் ஒரு நாளன்று, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் நிர்வாக வாரியத்திற்கு ஓர் உறுப்பினரை இப்பேரவை தேர்தெடுக்க முற்பட வேண்டும் ' என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

4. அறிவிப்புகள்.

(அ) வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கு தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க, வேளாண்மை பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கு தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர் நியமனத் தாள்களை 6—7—1971, செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர், செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனத் தாள்கள் 7—7—1971, புதன்கிழமை காலை 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 8—7—1971, வியாழக்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஒன்றுக்கு மேற்படுமாயின் 9—7—1971 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே உறுப்பினர்கள் ஓய்வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

5. 1971-72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 26—பாசனம்.

கோரிக்கை எண் 27—பொதுப்பணிகள்—பணிகள்.

கோரிக்கை எண் 28—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும்.

கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு.

கோரிக்கை எண் 42—பொதுப்பணிகள் மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1971-72-க்கான மானிய கோரிக்கை மீது வாக்கெடுப்பு இன்று 3-ம் நாள் விவாதம். இந்த விவாதத்தில் இன்றைக்கு மொத்தம் 20 மெம்பர்கள் பங்கெடுக்க வேண்டியிருக்கிறது. அமைச்சரையும் சேர்த்து 20 பேர்கள் பேச வேண்டியிருக்கிறது. கட்சித் தலைவர்கள் 3, 4 பேர்கள் பங்கு கொள்ள வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு மெம்பரும் 6 அல்லது 7 நிமிடம் பேசினால் தான் இந்த விவாதத்தை முடிக்க முடியும் என்பதாலே நேற்று ஒத்துழைப்பு தந்தது போல இன்றைக்கும் ஒவ்வொரு மெம்பரும் 5 அல்லது 6 நிமிடங்களுக்கு மேல் போகாமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. சி. வி. எம். அண்ணாமலை** : சட்ட மன்ற பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை நிதி நிலை அறிக்கையை ஆதரித்துப் பேசுகின்ற வாய்ப்பை எனக்குக் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் அளவறிந்து உணவு அளிப்பது போல 6, அல்லது 7 நிமிடம் என்று அளித்து, உள்ள குறைகளை எடுத்துச் சொல்ல வாய்ப்பு இல்லாத அளவிலே பேரவைத் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அருள் கூர்ந்து என் போன்றவர்களுக்கு வாய்ப்பளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு ஏற்பட்டான பிறகு தமிழகத்திலே அரிய சாதனைகள் பொதுப் பணித் துறையின் மூலம் இந்த அரசு செய்து காட்டியிருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக தமிழகத்திலிருக்கிற ஏரிகளை சீரமைப்பதில் அது எடுத்துக்கொண்டிருக்கிற கவனத்தை நோக்குகிறபோது நிச்சயமாக இந்தப் பொதுப் பணித்துறையினுடைய செயலை, திறனை பாராட்டித் தீர வேண்டும். அதே நேரத்தில் பாசனத் துறைக்கு அது எவ்வளவு விரைந்து செயலாற்றி இருக்கிறதென்பதையும், அதன் மூலமாக இந்த நாடு நம்